**செய்தி வெளியீடு எண் : 1114** **நாள் : 01.08.2024**

# செய்தி வெளியீடு

கலை பண்பாட்டுத் துறை, சென்னை அரசு கவின்கலைக் கல்லூரி சார்பில் தமிழக ஓவியச் சிற்பக் கலைஞர்களின் வாழ்வாதார மேம்பாட்டினை ஏற்படுத்திடும் வகையில் "சென்னையில் ஓவியச் சந்தை" சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியக வளாகத்தில் 03.08.2024 முதல் 05.08.2024 வரை 3 நாட்கள் நடைபெறவுள்ளது. இந்த ஓவியச் சந்தையில் தமிழகத்தைச் சார்ந்த கலை வல்லுநர்களின் ஓவியம் மற்றும் சிற்பக் கலைப் படைப்புகள் விற்பனைக்காக 100 அரங்குகளில் காட்சிப்படுத்தப்படவுள்ளது. இந்த "ஓவியச் சந்தையை" மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்கள் 03.08.2024 அன்று காலை 11 மணியளவில் துவங்கி வைக்க உள்ளார்கள். சென்னையில் முதன்முறையாக மிகப் பிரம்மாண்டமாக நடைபெறும் இந்த ஓவியச் சந்தையை பொதுமக்கள் பார்வையிட்டு தங்களுக்கு விருப்பமான கலைப் படைப்புகளை வாங்கிச் செல்ல கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu